**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 09.10.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## உலக ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் செல்கள் தினம் 2025

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் துறை, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் இணைந்து (ICAR) உலக ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் செல்கள் தினம் 2025 – ஐ 08.10.2025 அன்று புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் துறை பணிமனையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் துறை தலைவர் பேராசிரியர் முனைவர். தே. ரமேஷ் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து, வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் அவர்கள் தலைமை வகித்து, பசுமை ஆற்றல் மாற்றத்தின் எதிர்காலம் – ஹைட்ரஜனின் பங்கு குறித்து உரையாற்றினார். இந்நிகழ்வை இறுதிஆண்டு B.Tech (Energy and Environmental Engineering) மாணவர்கள் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தனர். மாணவர்கள் தயாரித்த குறுந்தொகுப்பு மற்றும் ஹைட்ரஜன் உற்பத்தி, சேமிப்பு மற்றும் எரிபொருள் செல்களின் பயன்பாட்டை விளக்கினர். நிகழ்ச்சியின் சிறப்பாக, எரிவாயு கலன் (Gasifier)இயங்கும் முறை மற்றும் ஹைட்ரஜன் எரிபொருள் செல்களின் (Fuel cell) செயல்பாட்டுக் காட்சியும் (Demonstration) மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. பேராசிரியர்கள், இணைபேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில், மாணவர்களின் பங்களிப்பை பாராட்டி நன்றி தெரிவித்து, துறையின் பேராசிரியர் முனைவர். வெ. பழனிசெல்வம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**